**மானுடவியல் மற்றும் சமூகவியல் உயர் கல்வி பொருட்டான தேசிய நிலையம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மானுடவியல் மற்றும் சமூகவியல் உயர் கல்வி பொருட்டான தேசிய நிலையத்தின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின்கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

நிலையத்தின் 1.5 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து நிலையம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயம் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.த.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆவதுடன், முகாமைத்துவமானது நிலையம் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிலையத்தின் அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிலையம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

------------------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து நிலையத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றன எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு நிலையத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

----------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகளை தயாரித்தல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு

------------------------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை தரநியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமையின் கருத்து வெளிப்பாடு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால; PhD மற்றும் MPhill கொடுப்பனவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும் அவர்களால் குறிப்பிட்ட பாடநெறிகளைப் பயில்வதற்கான நடவடிக்கை மேற்கொண்டிராமையால் மீளாய்வாண்டின் போது மீள் செலுத்தப்பட்ட ரூபா 2,870,000 தொகை மீளாய்வாண்டில் கிடைத்த திறைசேரி ஏற்பாடாகக் கருதி வருமானக் கூற்றில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | 2019 இறுதிக் கணக்குகளில் சரி செய்கின்றேன். | வருடத்திற்குரிய வருமானம் அல்லது கொடுப்பனவு உரிய வருடத்தின் வருமானாத்திறகு செம்மைப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | PhD மற்றும் MPhill கொடுப்பனவுகள் வருவாயாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கணக்கீட்டுக் குறிப்பு 2.11இன் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருப்பினும் முன்னைய ஆண்டுகளுக்கு உரிய ரூபா 5,722,143 வாகிய MPhill கொடுப்பனவுகள் செலவிடப்படாத மூலதனக் கொடுப்பனவாகக் கருதி மீளாய்வாண்டின் போது இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. | இந்த செலவிடப்படாத கொடுப்பனவுகள் 2019ஆம் ஆண்டின் கொடுப்பனவுகளாக பெற்றுக் கொடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. | கணக்கீட்டுக் குறிப்புகளுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டின் பிரகாரம் மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற ரூபா 373,476 வாகிய முதலீட்டு வட்டி மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2017ஆம் ஆண்டின் பிரகாரம் கிடைக்க வேண்டியவட்டியைக் கணக்கிடும் போது ஏற்பட்ட தவறுதல் காரணமாக ரூபா 373,476 வட்டி வருமானம் 2018ஆம் ஆண்டின் வருமானமாகக் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய குறை.ஃமிகை கணக்கிடும் போது ஆண்டிற்குரிய வருமானங்கள் மற்றும் செலவினங்களை மாத்திரம் இனங் காணுதல் வேண்டும். |

### 1.5.3 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன்னான தொடர்பு | இணங்காமை | முகாமையின் கருத்து வெளிப்பாடு | பரிந்துரை |
|---|---|---|---|
| 2005 இன் இல 02 கொண்ட மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான விதிக்கோவை 16 (1) பந்தி | மத்திய நிலையத்தின் பணிப்பாளர் முழு நேர அலுவலராக இருக்க வேண்டியிருப்பினும் 2011ஆம் ஆண்டு முதல் 2019 மார்ச் 15ஆந் திகதி வரை அப்பதவிக்கு அவ்வாறான உத்தியோகத்தர் ஒருவரி நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளரால் 2019.05.01 ஆந் திகதி முதல் மூன்று வருட காலப்பிரிவிற்கு நிறுவனத்தின் முழு நேர பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். | விதிக்கோவையின் பிரகாரம் மத்தியநிலையத்தின் பணிப்பாளர் எப்போதும் முழுநேரமும் செயற்படும் உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும் என்பதால் முழுநேர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமையின் கருத்து வெளிப்பாடு | பரிந்துரை |
|---|---|---|
| 2005 ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரையிலான காலப்பிரிவில் 18 விரிவுரையாளர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தம் ரூபா 13,521,456 கொடுப்பனவுகளுக்கு உரிய கற்கை நடவடிக்கைகள் நிறைவு பெறாமை காரணத்தால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. குறிப்பிட்ட விரிவுரையாளர்களிடமிருந்து அக்கொடுப்பனவுத் தொகையினை அறவிடுவதற்கான போதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அது தொடர்பில் கணக்குகளில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவினைப் பெற்றுக் கொண்ட விரிவுரையாளர்கள் கற்கை நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்யாமை காரணத்தினால் இரத்துச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் பெறுமதி 2019 நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கின்றேன். | விரிவுரையாளர்களுக்கு கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுக்கும் போது உரிய கற்கை நடவடிக்கைகள் குறிப்பிட்ட காலப்பிரிவினுள் நிறைவு செய்து கொள்ள வேண்டும் என நிபந்தனையிட வேண்டியுள்ளதுடன் அது தொடர்பில் பின்னூட்டம் செய்யதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 111,357,311 பற்றாக்குறையாகியதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,237,688 வாக இருந்தது. அதன் பிரகாரம், நிதிசார் விளைவுகளில் ரூபா 112,594,999 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களினால் பட்டக் கொடுப்பனவுகள் மற்றும் மெய்யியல் முதுமானி பட்டக் கொடுப்பனவுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவு அதிகரித்தமை பிரதானமான ஏதுவாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவினங்கள் விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டில் பிரதான வருமான முலங்களான திறைசேரியால் பெற்றுக் கொடுக்கப்பட்ட மீண்டெழும் கொடுப்பனவுகள் மற்றும் ீனு மற்றும் ஆீடை பட்டக் கொடுப்பனவுகள் மொத்தம் ரூபா 60,631,000 வினை முன்னைய ஆண்டின் அவ்வருமானமாகிய 76,977,493 ரூபாவுடன் ஒப்பிடுகை யில் ரூபா 16,346,493 ஆகிய நூற்றுக்கு 21வீத வீழ்ச்சியாகும். அவ்வாறே மீளாய்வாண்டில் பிரதான செலவின உருப்படியாகிய ஊழியர் ஊதியம் மற்றும் ீனு பட்டக் கொடுப்பனவுகள் மற்றும் ஆீடைட் பட்டக் கொடுப்பனவுகளுக்கான செலவினமாகிய ரூபா 166,371,204 வினை முன்னைய ஆண்டின் செலவினமாகிய ரூபா 71,595,606 வுடன் ஒப்பிடுகையில் ரூபா 94,775,598 ஆகிய நூற்றுக்கு 132 வீத அதிகரிப்பினை அவதானிக்க முடிந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

நிதியத்தின் நடப்பு விகிதம் மீளாய்வாண்டில் 0.22:1 ஆகியதுடன் கடந்த ஆண்டில் அவ்விகிதம் 1.44:1 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமையின் கருத்து வெளிப்பாடு | பரிந்துரை |
| --- | --- | --- |
| இம்மத்திய நிலையத்தினை நிறுவுவதற்கும் நடாத்துவதற்கும் பிரதான நோக்கம் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு கலாநிதி மற்றும் மெய்யியல் முதுமானி பட்டம் படிப்பினை நிறைவு செய்வதற்கு நிதிசார் கொடுப்பனவு வழங்குதல் ஆகும். எனினும் 2005ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை கலாநிதி மற்றும் மெய்யியல் முதுமானி பட்டதாரிகள் 493 பேருக்கு ரூபா 733,506,686 நிதிக் கொடுப்பனவு | ஆரம்ப கட்டத்தில் நலன்பெறுநர்கள் தொடர்பில் நிறைவேற்ற வேண்டிய முன் நிபந்தனைகள் இல்லாத போதும் தற்போது குறிப்பிடத்தக்களவு நபந்தனைகள் முன்வைக்கப்பட்டுள்ளமையும் அவற்றை நிறைவேற்றுவதற்கு விண்ணப்பதாரிகள் தவறுகின்றமையும் காரணத்தால் | மத்திய நிலைத்தின் நோக்கம் நிறைவேற்றப்படும் வகையில் பெறுநர்கள் குறைவடைவதற்கான காரணங்களை இனங்கண்டு அவ்விடயங்களை மீளாய்விற்கு உட்படுத்தி பெறுநர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல |

| | | |
|---|---|---|
| பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் அதில் 42 பெறுநர்களின் கற்கை நடவடிக்கைகள் செயற்படாத் நிலையில் இருந்ததுடன் பணக் கொடுப்பனவு பெற்றுக் கொடுத்த எண்ணிக்கை 2005ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018ஆம் ஆண்டில் 60 முதல் 6 வரையிலான நூற்றுக்கு தொண்ணூறு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. | கொடுப்பனவுகள் வழங்கப்படுவது குறைந்துள்ளதைக் காணலாம். | வேண்டும். அவ்வாறே, இக்கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுக்கும் போது உரிய கற்கைநெறிகளை குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை ஏற்படுத்துதல் வேண்டும். |

**3.2 நிதியங்களைக் குறைவாகப் பயன்படுத்துதல்**

----------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமையின் கருத்து வெளிப்பாடு | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நிதிக் கூற்றுக்களில் செலவிடப்படாத ரூலதனக் கொடுப்பனவாகக் குறிப்பிட்டுள்ள ரூபா 8.4 மில்லியன் தொகையில் 03 உருப்படிகளுக்கு உரிய ரூபா 7.8 மில்லியன் மூலதனப் பெறுகைகள் ஒரு வருடத்திற்கு அதிக காலமாக எதிர்பார்க்கப்பட்ட பணிகளில் ஈடுபடுத்தப்படவில்லை. | இந்நிதியங்கள் 2019 ஆம் ஆண்டில் உரிய நோக்கங்களில் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றேன். | வருடாந்தம் கிடைக்கும் திறைசேரி நிதியங்கள் உரிய வருடத்திலேயே இனங்காணப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்**

----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமையின் கருத்து வெளிப்பாடு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பட்டபின் படிப்பு பாடநெறிகளைக் கற்பதற்காக 2013ஆம் ஆண்டில் இருந்து 05 வருடக் காலப் பகுதிக்குரிய உயர்க் கல்வி அமைச்சு, Queensland University of Technology, Brisbane – Autralia நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் வருடத்திற்கு 30 பட்டபின் பட்டதாரிகளுக்கு கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டியிருந்தது. எனினும், செயலாற்றுகைத் தரவுகளின் படி 2014ஆம் ஆண்டு முதல் 2017ஆம் ஆண்டு வரை 17 கொடுப்பனவு பெறுநர்களுக்கு மாத்திரம் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தன. இதன் | அவுஸ்திரேலியாவில் பல்கலைக்கழகம் ஒன்றில் நுழைவு பெறுவதற்காக IELTS சாதாரண மதிப்பெண் 6.5 இருத்தல் போதியதாக இருப்பினும் NCAS கொடுப்பனவினை வழங்குவதற்கு அம்மதிப்பெண் 7.0ஆக இருத்தல் அத்தியாவசியமாகும். | பட்டபின் படிப்பு பாடநெறிகளுக்கு நுழைவினைப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பில் ஏனைய நிறுவனங்களில் பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகளையும் கவனத்திற் கொண்டு புதிய பட்டபின் படிப்பு பாடநெறிகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம், எதிர்பார்க்கப்பட்ட 13 நலன்பெறுநர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கானெ சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படாது இருந்தமையால் செயலாற்றுகை இலக்கினை அடைய முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அவ்வாறே, NCAS கொடுப்பனவினை வழங்குவதற்கான ஏனைய முன் நிபந்தனைகளைப் பூர்திசெய்வதற்கு விண்ணப்பதாரிகள் தவறிய காரணத்தினாலும் இவ்வாறு கொடுப்பனவுகளை வழங்குவதில் குறைவு ஏற்பட்டிருக்கின்றது. | நுழைவு பெற வேண்டிய ஆரம்ப மற்றும் ஏனைய முன் நிபந்தனைகளை மீண்டும் மீளாய்விற்கு உட்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | ஆய்வுக் கலாசாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கு திறனாய்வுச் சிந்தனையை மேம்படுத்துதலின் கீழ் பல்கலைக்கழக கல்விசார் பணிக்குழாத்தினருக்காக ஆய்வு நடவடிக்கைகளுக்கு மீளாய்வாண்டினுள் இரண்டு சிறப்புச் சொற்பொழிவுகளை 25 பேர்களின் பங்குபற்றலுடன் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. எனினும் ஒரு சிறப்புச் சொற்பொழிவு மாத்திரம் நடாத்தப்பட்டதுடன், அதில் 10 பேரைக் கொண்ட குறைந்த எண்ணிக்கையானோரே பங்குபற்றியிருந்தனர். | இந்நிலைமையினைத் தவிர்த்து புதிய கோணத்தில் சிறப்புச் சொற்பொழிவுகளை நடாத்துவதற்கு 2019ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செயற்பாட்டு திட்டத்தின் இலக்கு நோக்கங்களை உச்ச அளவில் அடைவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக அமைப்பினுள் நிர்வாக மற்றும் கல்விசாரா பணிக்குழாத்தினர் செயலாற்றுகையினை விருத்தி செய்தல் தொடர்பில் நடாத்தவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 05 பாடநெறிகளில் 03 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அவ்வாறே, இப்பாடநெறிகளுக்காக 50 பேர் பங்குபற்றுவதற்கு இருப்பினும் உண்மையில் 11 பேர் மாத்திரமே பங்குபற்றி இருந்தனர். | 2018ஆம் ஆண்டில் 2 EVIEWS பாடநெறிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதில் ஒன்றை 2018 திசெம்பர் மாதம் 14, 15ஆம் திகதிகளில் நடாத்துவதற்கு ஏற்பாடாக இருந்தது. அப்பாடநெறியில் பங்குபற்றுவோரின் கோரிக்கைப் பிரகாரம் அப்படநெறியினை 2019 ஜனவரி மாதம் 23,24ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது. | திட்டங்களைத் தயாரிக்கும் போது அடையக்கூடிய இலக்குகளை இனங்காண்பதற்கும் அவ்விலக்குகளை அடைவதற்கும் தந்திரோபாயத்துடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |